நாள்.07.10.2025

**அசல் வழக்கு எண். 109/2022**
**பெயர். திருமேனி**

**த.பெ.முருகையன்**

**பி.வா.சா.1 – வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். என்னை யார் அழைத்து வந்தது என்றால் 1ம் பிரதிவாதி. நான் MA.,B.Ed, படித்துள்ளேன். Hidustan Agency company ல் cashier ஆக பணிபுரிகிறேன். நான் விடுப்பு பெற்றுதான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் ஆமாம். ச.எண்.431/3பி, 431/4 எங்கள் வகையறாவிற்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் 1995 வாக்கில் வாய்மொழி பரிவர்த்தனை நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எங்களுக்கு சொந்தமான ச.எண்.431/3பி, 431/4 யாருக்கு நாங்கள் கொடுத்தோம் என்றால் ஆரோக்கியசாமி குடும்பத்திற்கு கொடுத்தோம். 1995 ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 6,7 வயது இருக்கும். ஆரோக்கியசாமி அதற்கு பதிலாக என்ன ச.எண் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எங்கள் சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது.

1995 ல் எந்த வாய்மொழி பரிவர்த்தனையும் கிடையாது நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. 1995 ல் எனக்கு 6 வயது அதனால் பரிவர்த்தனை பற்றி தெரியாது என்றால் என் அம்மா சொல்லிதான் தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது என்றால் ஆமாம். ச.எண்.431/3பி, 431/4 ஆரோக்கியசாமி குடும்பத்திற்கு நாங்கள் பரிவர்த்தனையாக கொடுத்த சொத்து அல்ல என்றால் இல்லை நாங்கள் பரிவர்த்தனையாக கொடுத்துள்ளோம். எங்கள் சொத்து அவர்களிடமும் அவர்கள் சொத்து எங்களிடமும் உள்ளது. வா.சா.ஆ–11 ன் படி ச.எண்.431/4 யை 30.07.2002 ல் ரெங்கசாமி மகன்கள் முருகையன், மலையப்பன் ஆகிய இருவரும் ஆரோக்கியசாமிக்கு கிரையமாக கொடுக்கப்பட்ட சொத்து என்றால் இல்லை பரிவர்த்தனையாகதான் கொடுக்கப்பட்டது பணம் ஏதும் வாங்கவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. பரிவர்த்தனை தான் செய்துள்ளோம். பரிவர்த்தனை செய்யப்பட்டதற்கு எழுத்துமூலமாக ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ன் படி ச.எண்.431/3பி யை 26.08.2010 ல் வாதி வின்சன்ட் சவரியார், நல்லம்மாள், மலையப்பன், குணசேகரன்

ஆகியோரிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு பதிவான கிரைய பத்திரம் மூலம் கிரையம் வாங்கிய சொத்து என்றால் இல்லை பரிவர்த்தனைக்காக கிரையமாக எழுதப்பட்டது. 1ம் பிரதிவாதி சொல்லிகொடுத்து அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பரிவர்த்தனை என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

எங்களால் பரிவர்த்தனைக்காக கொடுக்கப்பட்ட சொத்தின் சர்வே எண், விஸ்திரணம் தெரியவில்லையோ நான் பரிவர்த்தனை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. ச.எண் மட்டும்தான் தெரியும். என்னுடைய வாக்குமூலத்தில் ச.எண்ணை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நல்லம்மாள் என் அம்மா, மலையப்பன் என் சித்தப்பா, குணசேகரன் என் சித்தப்பா. இவர்கள் மூவரும் நடமாடிக்கொண்டு நல்ல ஆரோக்கியத்துடன்தான் இருக்கிறார்கள் என்றால் இல்லை. அவர்களுடைய மருத்துவ சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு ஆசை காட்டி பொய் சாட்சியம் அளிக்க சொல்லியுள்ளார் என்றால் இல்லை.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.